1967 ஜூன் 19]

திரு. நா. சௌந்தரபாண்டியன் : இப்போது கிராம அதிகாரிகள் தாலுகா தலைமையிடம் கிஸ்து சென்டர் முதலியவைகளுக்குப் போவதற்கு பிரயாணப்படி, தினப்படி முதலியவைகள் கொடுப்பதில்லை. இனிமேல் அந்தப் படிகளைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவைகளுக்காகத்தான் பொதுவாக நாமினல் அலவன்ஸ் என்று கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கிராம முன்சீப்புக்கள், கணக்குப்பிள்ளைகள் பொது மக்களுக்கு அத்தாட்சிகள் கொடுக்கும்போது பணம் வாங்கிக்கொண்டு கொடுக்கிறார்கள். இதுபோன்ற நிலைமையை மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது போன்ற நிலைமைகள் ஏதாவது இருந்தால், அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு உறுப்பினர்கள் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கெ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, கிராம கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்காததால், அவர்கள் வசதி படைத்தவர்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் அவர்களின் ஊதியத்தை உயர்த்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதற்கு நான் முன்பே பதில் சொல்லி விட்டேன்.

சிதம்பரம் தாலுகா ஆபீசுக்கு புது கட்டடம்

* 29 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சிதம்பரம் தாலுகா, தாசில்தார் ஆபீசுக்கு புதுக் கட்டடம் ஒன்று கட்டும் திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் வரவில்லையாதலால், வினா எண். 30 தள்ளிப் போடப்படுகிறது.